NP – 080

5

# I Semester B.A./B.V.A./B.F.A. Examination, March/April 2023
## (NEP – 2021-22 and Onwards) (Freshers + Repeaters)
## TAMIL LANGUAGE (Paper – I) (Part C-I)

St. ... College LIBRARY Bangalore-560013

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1) காடும் காடு சார்ந்த பகுதியும்

1) குறிஞ்சி 2) முல்லை

3) மருதம் 4) நெய்தல்

2) சார்பெழுத்துகளின் வகைகள்

1) நான்கு 2) ஆறு

3) எட்டு 4) பத்து

3) நப்பூதனார் இயற்றிய நூல்

1) பட்டினப்பாலை 2) குறிஞ்சிப்பாட்டு

3) முல்லைப்பாட்டு 4) நெடுநல்வாடை

4) ஐந்திணை ஐம்பது இவற்றில் ஒன்று

1) பதினெண் கீழ்க்கணக்கு 2) பத்துப்பாட்டு

3) எட்டுத்தொகை 4) சிற்றிலக்கியங்கள்

5) இவற்றில் வன்தொடர்க் குற்றியலுகரச் சொல்

1) வண்டு 2) வரகு

3) பாக்கு 4) நாடு

P.T.O.

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1) புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே

2) 'இன்னே வருகுவர் தாயர்' என்போள்
நன்னர் நல்மொழி கேட்டனம்

3) வருவர் வயங்கிழாய் வாள் ஒண்கண் நீர்கொண்டு
உருகி உடன்று அழிய வேண்டா

4) பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும்

5) கோலச் சிறுகுருகின் குத்து அஞ்சி ஈர்வாளை
நீலத்துப் புக்கு ஒளிக்கும் ஊரற்கு

6) மறுநாள் கட்டிக்கொள்ளுவதற்காகத் துவைத்து உலர்த்தி
மடித்து வைத்திருந்த –உண்மையில் 'பீத்தல்' இல்லாத
நாட்டுச் சேலையை எடுத்துக் கொண்டு வந்து ராஜா
உட்பட எல்லாருக்கும் சேர்த்துப் போர்த்தினாள்

7) ''ரொம்ப சில்லுனு இருக்கு. தம்பி, ஏண்டா சிரிக்க
மாட்டேங்கிறே ? கையை ஆட்டு... ஆட்ட மாட்டியா ?
கண்ணைத்திற'' என்று இமைகளை விலக்கி விட்டாள்

8) வீதி வீதியாய் அலைந்து குப்பைக் காகிதம் பொறுக்கி...
சர்தார் பாயின் பழைய பேப்பர்மார்ட் கடையில் போட்டு
விட்டு... அவர் தருகிற பணத்தைத் தன் தாயிடம்
தருவான் மணி

## SECTION – B

III. எவையேனும் ஐந்திற்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) மெய்யெழுத்துகள் யாவை ? அதன் வகைகளைக் கூறுக.

2) இன்னிசை அளபெடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3) வினா எழுத்துகள் யாவை ? அதன் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

4) மொழியின் முதலில் வரும் எழுத்துகளைச் சான்றுடன் எழுதுக.

5) குறட்டை ஒலி – என்ற சிறுகதையின் கருவை விளக்குக.

6) 'விளக்கின் நிழல்' கதையில் சரவணனின் பாத்திரப் படைப்பு குறித்து எழுதுக.

7) பாலைத் திணையின் அன்புக் காட்சியை ஐந்திணை ஐம்பது வழிநின்று விளக்குக.

8) முல்லைப் பாட்டு கூறும் கார்கால வருகையைக் காட்சிப்படுத்துக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) தலைவி நண்டை நோக்கிக் கூறுவனவற்றை ஐந்திணை ஐம்பது எவ்வாறு சித்தரித்துள்ளது ?

2) கனியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலை விளக்கி வரைக.

3) தலைவியின் துயர் தீர்க்க விரைந்த தலைவன் குறித்து முல்லைப்பாட்டு கூறுவன யாவை ?

4) வாய்ப்பினை இழந்த இளைஞர்களின் வாழ்க்கை நிலையை 'புலிக் கலைஞன்' எனும் கதை மூலம் புலப்படுத்துக.

5) 'உயிர்க் கருவாடுகள்' – என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை எழுதுக.

6) கந்தசாமியின் பாத்திரப் படைப்பு குறித்து எழுதுக.